பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper


**SOLIDE**
PRODUCTION
இந்தியாவில் இறக்குமதிசெய்த 3 Phase
மோட்டர்கள்
2 HP இல் இருந்து 25 HP
வரையிலும்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
'சொலிட்'
பண்டத்தரிப்பு அல்லது
லிங்கம்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை
ரூ. 2-00

WHEN ONLY
THE BEST IS
GOLD ENOUGH
BUY



Solide Pumps

டெர் 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ வைகாசி மீ 24 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 20 (06 - 06 - 988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 98

# ஆறுயிரம் துருப்புகள் நாளை இந்தியாவுக்கு

## பீரங்கி, கவசவாகனப் பிரிவுகளுக்கு திருமலையில் வழியனுப்பு வைபவம்

கொழும்பு, ஜூன் 6

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டுள்ள இந்தியத் [அமைதிப் படை] துருப்புக்களில், ஆறுயிரம் பேர் நாளை தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

ஒரு பீரங்கிப் படைப் பிரிவும், ஒரு கவச வாகனப் பிரிவும் அவற்றின் ஆயுத தளபாடங்கள் சகிதம் திருகோணமலையில் வைத்து வழி அனுப்பி வைக்கப்படும். மேற்கூறிய ஒவ்வொரு பிரிவிலும் தலா மூவாயிரம் துருப்புக்கள் இருப்பதாகக் கூறப்பட்டது.

வழியனுப்பும் வைபவத்தில் இலங்கை முப்படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவும், மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

இந்திய அமைதிப் படையின் பீரங்கிப் பிரிவும், கவச வாகனப் பிரிவும் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை இது சம்பந்தமான வைபவம் திருகோணமலைத் துறைமுகத்தில் இடம் பெறும்என்று அறிவிக்கப்படுகிறது.

திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ள பிரிவுகள் ஒவ்வொன்றும் மூவாயிரம் பேரைக் கொண்ட சிறு பீரங்கிப் படை, ஒரு தாங்கிப் படைப் பிரிவு ஆகியன என்று மேலும் அறிவிக்கப்படுகிறது.

### இலங்கைத் தளபதி

திருப்பி அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியில் இலங்கைக் கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க, இந்திய இராணுவத்தின் தென் பிராந்தியத் தளபதி ஜெனரல் ஏ. கே. சட்டர்ஜி, அமைதிப் படையின தளபதி மேஜர் ஜெனரல் கல்கத் ஆகியோர் கலந்து கொள்வர்.

இது சம்பந்தமான செய்திகளைச் சேகரிக்க நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் நாளை திருகோணமலை செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்படுகிறது

வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலைமை திருந்தி உள்ளதால் மேலதிகமாக இருந்த துருப்புக்களில் ஒரு பகுதியினரே நாளை அனுப்பப்படுகின்றனர் என்று —

இதேபோல மற்றும் ஒரு தொகுதித் துருப்புக்கள் இம்மாத முடிவுக்குள் திருப்பி அனுப்பப்படுமென்றும் ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

### இடைத்தேர்தல் நியமனப் பத்திரங்கள்

கொழும்பு, ஜூன் 6

கெக்கிராவ, கட்டுகம்பளை, வெலிமட, இரத்தினபுரி ஆகிய நாடாளுமன்ற இடைத்தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி இம்மாதம் 15ஆம் திகதி என்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தல்களில் யு என் பியுடன் சுதந்திரக்கட்சியும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. (அ-எ)

### நீதிமன்றங்கள் நான்கு தீக்கிரை

கொழும்பு, ஜூன் 6

தென் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்களில் நான்கு நீதிமன்றங்கள் எரிக்கப்பட்டுவிட்டன.

அத்தனகல்லை, ஜாஎல, மவுண்ட் லெவினியா, பதுளை ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களே அவையாகும் (எ)

## தொலைபேசி வசதி இன்றி அல்லலுறும் யாழ் மின்சார சபை

யாழ்ப்பாணம் ஜூன் 6

அத்தியாவசிய சேவைகளுள் ஒன்றான யாழ். மின்சாரசபை தனது அலுவலகத் தேவைகளுக்காகத் தொலைபேசி வசதியின்றிப் பெரும் அவல நிலையில் இருந்து வருகிறது.

தற்போது மின்சாரம் ஓர் அத்தியாவசியசேவையாக மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் முக்கிய இடத்தை வகித்துவருகிறது.

ஆனால் யாழ் மின்சார சபை தனது பிற அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளத் தொலைபேசி வசதி இல்லை.

மின்சார சபையின் யாழ் டிப்போ, சுன்னாகம் உப மின் நிலையத்துடன் தொடர்பு கொள்ளக் கூடத் தொலைபேசி வசதி இல்லை.

தற்பொழுது அமைதிப்படையினரால் வழங்கப்பட்டுள்ள தொலைபேசித் தொடர்பும் சுன்னாகம் மின்நிலையத்திற்கு வழங்கப்படவில்லை.

இதனால் மின்துண்டிப்புக்கள் ஏற்படும் வேளைகளில் மின்சார ஊழியர்கள் யாழ் டிப்போவிலிருந்து சுன்னாகம் மின் நிலையத்துக்கு நேரிலேயே சென்று விவரம் அறிய வேண்டியுள்ளது.

மேலும் மின்சார சபையின் எந்த அலுவலகத்துக்கும் கொழும்புக்கான நேரடித் தொலைபேசி வசதி இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போது போன்று தென்பகுதியில்மின்தடை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மின்சார சபையின் தலைமை அலுவலகங்களுடனும் தொடர்பு ஏற்படுத்த முடியாதநிலைமை இருந்து வருகின்றது.

## பல்கலைக்கழக மாணவர் இன்று வகுப்புகளைப் பகிஷ்கரிப்பர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று திங்கட்கிழமை விரிவுரைகளைப் பகிஷ்கரிக்க உள்ளனர்.

பல்கலைக் கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் சார்பில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகப் பதில் உபவேந்தரை, அமைதிப்படையினர் முகாமுக்குக் கூட்டிச் சென்றதையும், அவரை அகௌரவப்படுத்தியதையும் கண்டித்தே மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்க உள்ளனர்.

இது சம்பந்தமாக சகல பீட மாணவர்களின் பிரதிநிதிகள் சார்பிலும் விடுக்கப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### பதில் உப வேந்தருக்கு நடந்த அகௌரவம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கடந்த வெள்ளியன்று பல்கலைக்கழகத்துள் நுழைந்த அமைதிப் படையினர் பதில் துணை வேந்தரை முகாமுக்கு அழைத்துச் சென்று கௌரவமற்ற முறையில ஏசியதாகக் குற்றம் சாட்டப்படுகிறது

இது குறித்து அறியப்படுவதாவது:-

அண்மையில் அமைதிப் படையின்ரால் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், மற்றும் பதில் அதிபர்கள் உப அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நடத்தப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

மூச்சந்தி முரளி



போட்டியிலை கலந்து கொள்ளாமல், விளையாடிறவையளிலை பிழை பிடிக்கிற கூட்டம் மாதிரித்தானே சுதந்திரக் கட்சியும்.....!

வியாழன் கேர்தல்:

## தென் மாகாணத்திற்கு மேலதிக ராணுவம் விரைவு!

கொழும்பு, ஜூன் 6

தென்மாகாணத்திற்கு மேலதிக இராணுவத்தினர் நேற்று முதல் அனுப்பப்பட்டு வருவதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள தென் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான பாதுகாப்புக் கருதியே இராணுவம அனுப்பப்படுகிறது.

இதனிடையில் தென் மாகாணத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களில இலங்கை ஆயுதப்படையினர், தேடுதல் பணியைத் தீவிரமாக்கியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது

தென் மாகணத்தக்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் ஆயுதப் படையினரால் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகிறார்கள்.

வெளிமாகாணங்களில் உள்ள தீவிரவாதிகள தென்மாகாணத்திற்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்று கூறப்படுகின்றது. [அ எ]

### இரவுநேர ரயில்சேவைகள் ரத்து

கொழும்பு, ஜூன் 6

கொழும்புக்கோட்டையில் இருந்து மாலை 6-30 மணிக்குப் பின்னர் சேவையில் ஈடுபட்டு வந்த பதினொரு நீண்ட, குறுகிய தூர ரயில் சேவைகள் தற்காலிகமாக ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

ரயில்வே கார்ட், சாரதிகள் இரவு நேரத்தில் கடமையாற்ற மறுத்து வருவதால்தான் இத் தற்காலிக ரத்து என்று ரயில்வேத் திணைக்களம் அறிவித்தது. (அ-எ)

## புதிய போதனு வைத்தியசாலை ஒன்றை நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம் ஜூன் 6

வடபகுதியில் மேலும் ஒரு போதனு வைத்தியசாலை நிறுவ வேண்டிய தன் அவசியத்தை வடபகுதியின் வைத்தியத் துறை அதிகாரிகள் குழு வலியுறுத்தியுள்ளது.

புதிய போதனு வைத்தியசாலை நூறுகோடி ரூபா செலவில நிறுவப் படவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது

இவ்வாறு யாழ் போதனு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சு நகசினராக்கினியன் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ் நகரில் உள்ள போதனு வைத்தியசாலை நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு மட்டுமல்ல. மருத்துவ பீட மாணவர்களின் பயிற்சிற்கும் போதுமானதாக இல்லை.

இங்கு நவீன மருத்துவ வசதிகள் இல்லை. வைத்தியசாலையின் கட்டிடங்களிலும் பெரும் பாலானவை மிகப் பழைமையானவை.

இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது இங்கு வேறொரு போதனுவைத்தியசாலை அவசியம் தேவை இதனை நான் மட்டும் கூறவில்லை. வட பகுதியின் பல்வேறு வைத்தியத்துறை அதிகாரிகளாலும் இதர அரச அதிகாரிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

இதனைக் கருத்திலிற் கொண்டே வடபகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

6—6—1988
வைகாசி 24
திங்கட்கிழமை
சுபநேரம்:
11.52 முதல் 1 22 வரை
ராகுகாலம்:
7 22 முதல் 8 52வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
இரவு 3 1 க்கு மேல
அட்டமி

## சு. கட்சி முறையிடும்

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சீர்கேடுகள் குறிந்து தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துத் தெரிவிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்து இருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி போட்டியிடவில்லை எனினும் இதுபோன்ற சீர்கேடுகள் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில இடம் பெறுமல் பார்த்துக் கொள்ளும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கும தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுதந்திரக்கட்சிப் பேச்சாளர் சொன்னார். [அ-எ]

# இன்று சுன்னாகத்தில் ஈரோஸ் போராட்டம்

யாழ்ப்பாணம் ஜூன்.6

ஈரோஸ் இயக்கத்தின் திட்டமிட்ட எதிர்ப்புப் போராட்டம் இன்று முதற்கட்டமாக சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படுகிறது.

★ உடனடியாக யுத்த நிறுத்தம் அமுலாக்கப்பட வேண்டும்.

★ தமிழ் மக்களது நன்மைகருதியே பேச்சு வார்த்தை தொடரப்பட்டு முடிவு ஏற்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தே ஈரோஸ் இயக்கம் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் போராட்டம் எத்தகைய இடர் ஏற்படினும் தொடர்ந்து படிப்படியாக ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என ஈரோஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உதயன் சுன்னாகம் செய்தியாளர் பின்வருமாறு அறிவிக்கிறார்:

காங்கேசன்துறை- சுன்னாகம் பிரதான வீதியில் இன்று காலை 9.00 மணி முதல நண்பல் 12 00 மணிவரை வீதிப் போராட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது

பிரஜைகள் குழுக்கள், சனசமூக நிலையங்கள்- தொண்டர் ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள்முன்னின்று இந்தப் போராட்டத்தைச் செய்யும்.

வர்த்தக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், கடையடைப்புச் செய்

[6 ஆம் பக்கம் பார்க்க

### எரிபொருள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது

கடந்த சில தினங்களாக வட பகுதிக்கான ரயில்சேவை நிறுத்தப் பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

எனினும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு சரக்கு ரயில் ஒன்று வந்து சேர்ந்தது. [இ-10]

## ரோஹண விஜேவீரா விடுத்திருக்கும் அறிக்கை

கொழும்பு, ஜூன் 6

சோழ சாம்ராஜ்யத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திய முதலாவது விஜயபாகு மன்னன் அடிச்சுவட்டில், தேசப்பற்றுள்ள மக்கள் ஒன்று திரண்டு இச்சட்ட விரோத, துரோக அரசை கவிழ்க்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற் குழுவின் சார்பில் தலைவர் ரோஹண விஜேவீராவும் பொதுச் செயலாளர் உபதிஸ்ஸ கமனுயகாவும் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

''இந்த அரசு சட்ட விரோதமானது- அதைப் பதவியில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கக் கூடாது''-என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-எ)

## உயர் அதிகாரியின் வீட்டில் இரவுச் சோதனை!

அரசாங்க உயர் அதிகாரி ஒருவரின் வீட்டில் இரவு எட்டு மணியளவில் அமைதிப்படை ஜவான்கள் பூரண சோதனை போட்டனராம்

இரவு வேளை வந்த அமைதிப்படை ஜவான்களிடம் உயர் அதிகாரி தம்மை யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்

எனினும் ஜவான்கள் தமது கடமையைச் செய்தனர். வீட்டில் உள்ள வாகனைச் சோதித்தனர். வீட்டின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் சோதனையிட்டனர். கூரை 'சீலிங்'கை உடைத்தும் பார்த்தனர். எதுவும் அகப்படவில்லை.

வீட்டை விட்டு வெளியே போகும்போது துப்பாக்கி வேட்டுகளை ஆகாயத்தை நோக்கித் தீர்த்து விட்டுச் சென்றனர்.

இந்தச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இடம்: பருத்தித்துறை (அ-160)

## வவுனியாவில் பதில் நீதிவான் வில்வராஜா கொலை

வவுனியா, ஜூன் 6

வவுனியா மாவட்ட பதில் நீதிவான் திருராமசிங்க வவுனியன் வில்வராஜா இனந்தெரியாதவர்களினால் கடந்த சனி இரவு காலை பதினொரு மணியளவில், வைரவப் புளியங்குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

58 வயதான இவருக்கு 4 பிள்ளைகள் இருக்கின்றனர். பிரபல சட்டத்தரணியான இவர் சமாதான நீதிவானாகவும் திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் பணி புரிந்து வந்தார்.

வழமை போல சனவிடுக்குப் போய்வந்து காணி உறுதியொன்றை எழுதிக் கொண்டிருந்த வேளையில், வீட்டினுட் புகுந்த இரண்டு ஆளுனர்களில் ஒருவர், இவரைச் சுட்டுக் கொன்றுள்ளார் கொலைஞர்கள் தப்பியோடிவிட்டார்கள்.

மர்மமான இக்கொலை மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது (அ-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

சகலவிதமான T. V. பூஸ்ரர், அன்ரனு வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக் கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள், மின்விசிறிகள் சைளு மின் அடுப்புகள் T. V. ஸ்ராண்ட் எவர்சில்வர் பொருட்கள் றைஸ்குக்கர் எலெக்றிக் கேற்றில்களும் கரம்போட், விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ், பாடசாலைபாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C 5299)

1976 ஆம் ஆண்டு கொம்பனி மூலம் இறக்குமதி செய்யப்பட்டு டாக்டர், உரிமையாளரால் தொடர்ந்து உபயோகிக்கப்பட்ட Peugeot304 குறைந்த மைல் ஓடங்கள் ஓடிய நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விலாசம்: மயிலணி, சுன்னாகம் [4170]

ஆலடிச்சந்திக்கு அருகாமையில் உள்ளதும். மானிப்பாய் வீதிக்கு போக்குவரவு உரிமை உடையதுமான தென்காணி விஸ்தீரணம் 9½ பரப்பு உள்ள காணி முழுவதுமாய் அல்லது துண்டு துண்டாய் விற்பனைக்குண்டு கமிஷன் கொடுக்கப்படமாட்டாது அரசடி பிறவுண் வீதியில் உள்ள "கோல்டன் சன்" கடையில் காலை 9 00 - 12 00 மணிக்குள் விசாரிக்கவும் [4160]

உயர்ரக அல்சேஷன் வெள்ளை நிற அழகான பெண் அம்மாவின் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு 887 ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி. [4168]

## கலர் மீன் விற்பனைக்கு

சகலவிதமான கலர் மீன்களும் உடன் விற்பனைக்குண்டு தொடர்புகட்கு Skip Aquarium and Electronics Stanley Road 37/4. Jaffna (Muslim's அருகில்) (4179)

## சேவை

மட்டக்களப்பில் உள்ள எமது நிறுவனத்துக்கு 5 வருட அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை. இலவச தங்குமிட வசதியும் போதிய சம்பளமும் வழங்கப்படும். ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர் பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி (4172)

## TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அதுடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co— Shabra அருகாமையில்) (C5300)

## வகுப்புகள்

புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் ஆண்டு 5 ஆண்டு 6 ற்கு ஆரம்பமாயுள்ளன ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் யாழ் முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன புதிய கல்வி நிலையம் செங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம் (4176)

## தேவை

1. சமையற்காரர் [4-] சம்பளம் உணவுடன் 1,300/-, 2. பரிசோதகர் [6] - சம்பளம் உணவுடன் 600/- 3 கணக்காளர், லிகிதர் ஆண்/பெண் (35 வயதுக்குட்பட்டவர்) 4. பாதுகாப்பு உத்தியோகத்தர் 5 சமையல் பரிசோதகர் வேலை பயில விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; Galaxy Rest No 30 Kannathiddi Road, Jaffna (4166)

வெளிநாட்டு முகவர் நிலையத்தில் வேலைசெய்த அனுபவமுள்ள பெண் உதவியாளர் உடனடியாகத் தேவை, ஓரளவு ஆங்கிலம் எழுத கூடியவரும், யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டியது Sujera Travels & Tours No: 21, Vembadi Road Jaffna (4163)

20 தொடக்கம் 24 வயதிற்குள் Steward [சாப்பாடு பரிமாறுவதற்கு] தேவை நேரில் வரவும் Dragon Restaurant 168 Temple Road, Jaffna (4169)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் பிரபல்யமான வீதிமுகப்புடன் வியாபார ஸ்தாபனம் தேவை யாழ் நகரசபை எல்லைக்குள் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு தேவை. தொடர்பு கொள்ளவும் J P. T Ltd 3, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம் [4171]

யாழ் நகரின் பிரபல மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு Bill Clerk. Account Clerk ஆகிய பதவிகளுக்கு 40 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி அடைந்திருக்கவேண்டும் C/o 224. உதயன் யாழ்ப்பாணம் [4173]

யாழ் நகரில் பிரபல மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு Cashier, Store-keeper ஆகிய பதவிகளுக்கு 40 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் கட்டக்கூடியவர்களுக்கு க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியடைந்திருக்க வேண்டும் C/o 225 உதயன் [4174]

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூசை செய்வதற்கு அனுபவமுள்ள பிராமணக் குருக்கள் தேவை வயது 40 க்கு மேல். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை "தலைவர்" வற்றாப்பளை அம்மன் கோவில் பரிபாலனசபை, முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்பவும், (4181)

கோழிப் பண்ணையில் வேலை செய்வதற்கு 2 ஆண்கள் தேவை வயது 15 40 தொடர்பு கொள்ளவும் R S K Farm, முருங்கையடி உடுவில். (4177)

## முக்கிய அறிவித்தல்

01 6-88 இல் சுதுமலை ஒஸ்போர்ட் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம் 1ம் பரிசு இல 533 2ம் பரிசு இல 593 3ம் பரிசு இல. 168, 4ம் பரிசு இல. 762, 5ம் பரிசு இல. 610. (4361)

## பெண் மருத்துவ உதவியாளர் தேவை

18 வயதிற்கும் 25 வயதிற்குமிடைப்பட்ட பயிற்றப்பட்ட, பயிற்சி பெற விரும்பும் பெண் மருத்துவ உதவியாளர்கள் தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது 8 ஆம் 9 ஆம் திகதி காலை 8 மணிக்கும் 12 மணிக்குமிடையில் நேரில் வரவும். வெகுமார் சகல நோய் சிகிச்சை நிலையம். இல 16 முஸ்லிம் கல்லூரி வீதி, (லைடன் சந்துக்கும் சிவலைப்பள்ளி வாசலுக்குமிடையில் — கஸ்தூரியார் சந்தியில்) யாழ்ப்பாணம். (4175)

## உடன்தேவை

அரசடி பிறவுண் வீதிச் சந்தியில் உள்ள Golden Sun என்ற கடைக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை 15 – 20 இடைப்பட்ட வயதுடையவராய் இருத்தல் வேண்டும் G. C. E. [O/L] படித்தவராகவும் கண்ணார்பண்ணையில் இருப்பவராகவும் இருக்கல் வேண்டும். காலை 9 00- 12 00 மணிக்குள் தொடர்பு கொள்ளவும். [4159]

## வகுப்புகள்

உள்நாடு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஓரிய சந்தர்ப்பம் Radio- TV Air Conditioning - Referi-geration வயறிங் வெல்டிங் மோட்டமெக்கனிசம் வைண்டிங் பிளம்பிங் Typing Spoken English குறுகிய காலத்தில குறைந்த கட்டணத்துடன் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன சான்றிதழ் பெறுமதியானது Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில (4180)

## தவறி விட்டது

543630780 X இலக்கம் உடைய இரஜரட்ணம் தங்கராசா ஆகிய எனது அடையாள அட்டையை தவறவிட்டுவிட்டேன் கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4366)

## காணவில்லை

04-06 88 காலை 8 30 மணியளவில் காங்கேசன்துறை மினிபஸ்ஸில எனது அடையாள அட்டையும் வங்கிக் கணக்குப் புஸ்தகங்களும் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன். நன்றி மு சிவரத்தினம் ஆசிரியர், அலைதீவு. (4368)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 31 Sri இலக்கம்கொண்ட மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு தொடர்பு: ஸ். பஸ்ரியன் 222 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4358]

வெளிநாடு செல்வதால் பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் T V செற், றேடியோ, ஹோல் செற் சிறிய பெரிய அல்மாரிகள் காரியாலய மேசை சாப்பாட்டு மேசை கதிரைகள் Show Case கண்ணாடி மேசை மற்றும் பலவித பொருட்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் சந்திக்கருகாமை. (3411)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

செங்குந்தா சந்தை குத்தகை (சயிக்கிள் பாதுகாப்பு உட்பட) 16 – 6 – 88 ஆம் திகதி தொடக்கம் 31 - 12 – 88ஆம் திகதி வரைக்கும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 15 - 6 - 88ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் கேள்விப் பிணையாக ரூ. 5000/-ம். கேள்விப் படிவக் கட்டணமாக ரூ 50/-ம் செலுத்துவதின் பேரில் 15-6-88ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை யாழ் மாநகராட்சி மன்ற நல்லூர் பண்டார மாளிகை அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ் மாநகராட்சி மன்ற நாலுவித வருமான கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வி கே. சிவஞானம்
மாநகராட்சி மன்ற மாநகர ஆணையாளர்
அலுவலகம், யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்.
03 - 06 - 88. [C 5367]

---

சங்கானை

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

குளிர்சாதனப் பெட்டி (Deep Freezer)

## கேள்விக்கூற்று

எமது சங்கத்தில் ஓர் குளிர்சாதனப் பெட்டி (DeepFreezer) கேள்விக்கூற்று மூலம் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் "தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்" என விலாசமிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "குளிர்சாதனப் பெட்டி கேள்விக்கூற்று" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ 11 - 6 – 88ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் அனுப்பி வைக்கவும். குளிர்சாதனப்பெட்டியைப் பார்வையிட விரும்புவோர் சங்க வேலைநாட்களில் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
[C 5364]

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



எமது அன்பு அன்னை
திருமதி சண்முகவடிவேல் பாக்கியம்
(பொன்குட்டி)
அவர்கள்

பேச்சடங்கு மட்டும் முருகன்
பெயர் சொன்னாள்
மூச்சடங்கு மட்டும் நெஞ்சில் முன்னினாள்-
பூச் சடலம்
போக்கி அவன் அடிக்கே புக்காள்

கடந்த 8- 5- 88 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்னையின் வீட்டுக்கிருத்தியம் நாளை 7 - 6 - 88 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இதில் அனைவரையும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அத்துடன் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் இறுதிக் கிரியைகளின் போது எவ்வழியிலும் எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரமக்கள்.

தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக
பிறவுண் வீதி,
கொக்குவில். (4109)

---

## கலையொளி சனசமூக நிலையம்

25-6 88 அன்று சிறப்பு விழா நடைபெறும் அன்றைய தினம் 1/6/88 அதிஷ்டம் பார்க்கப்பட்ட பரிசுகள் வழங்கப்படும்.

விபரம்:- பரிசு இலக்கம்
1 ஆம் பரிசு 722, 2 ஆம் பரிசு 332,
3 ஆம் பரிசு 193, 4ஆம் பரிசு 712,
5 ஆம் பரிசு 300
ஆறுதல் பரிசுகள்:- 565, 763, 64, 656, 954, 970, 266, 398, 934, 880.
(4106)

## சீருடைகள் இன்னும் இல்லை

கரவெட்டி, ஜூன் 6
கரவெட்டி கொத்தணிப் பாடசாலைகளுக்கு பாதிக்கப் பட்டவர்களுக்கான போருட் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழங்கும் சீருடைகள் இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
(இ-70)

---

# டுபாய்

## அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

★ எம்மிடம் விண்ணப்பித்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் நேர்முகப் பரீட்சை பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

6 - 6 - 88, 7 - 6 - 88, 8 - 6 - 88

பின்வரும் வேலைகளுக்கு மாத்திரம் வெற்றிடங்கள் தற்சமயம் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | எலெற்றிக்கல் என்ஜினியர் | 2 | 900 US$ |
| 2. | மேசன் | 5 | 250 ,, |
| 3. | தச்சுவேலையாள் | 5 | 250 ,, |
| 4 | கம்பி வளைப்போர் | 5 | 250 ,, |
| 5. | பிளம்பர் | 5 | 250 ,, |
| 6 | A/C ரெக்னீசியன் | 5 | 275 ,, |
| 7. | டெயின்ரர் — ஸ்பிறே | 5 | 275 ,, |
| 8. | எலெக்றீசியன் | 5 | 250 ,, |
| 9, | வெல்டர் | 5 | 250 ,, |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**K. லிங்கம்**
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

**A. தவச்செல்வம்**
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

[C 5370]

---

# டேட்டாசெட் (DATASET)

## உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

★ எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
★ பல வருட அனுபவமும் செயற்திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை
★ மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு — உங்கள் அலுவலகத்திற்கு – உங்கள் வீட்டுப்பாவனைக்கு ஏற்ற அனைத்து உருக்கு தளபாடங்கள்

- வாட்ரோப்ஸ் (Wardrobes)
- மேசைகள்
- கபினேட் (Filing Cabinet)
- அலுமாரிகள்
- காசுப்பெட்டிகள் (Cash Box)

மற்றும்

- தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில தயாரித்து வழங்கப்படும்.

● எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்து பார்வையிடலாம்

தரமானதும் விலை மதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்

# ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்

## OFFICE EQUIPMENT LTD.

கிளை அலுவலகம்:
45, பிரப்பங்குளம் வீதி,
(off K. K. S. ROAD)
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்தியிலிருந்து 150 யார்) (C 5359

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாபம் ஊடாகவே கூத்து மரபு சிங்கள மக்களிடம் பரவியது

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதி மக்களிடம் பாரம்பரியமாக நிலவிவந்த கூத்துமரபு சிலாப மூடாக சிங்கள மக்களிடமும் பரவியது.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "நாடகமும் அரங்கியலும்" என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு "இலங்கையின் பாரம்பரிய நாடக அரங்கு" என்ற தலைப்பில் உரையாற்றிய கலாநிதி திரு. மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்.

இவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், "நாம் எமது பாரம்பரியங்களை பாதுகாக்கத் தவறிவிட்டோம். சிங்கள மக்கள் தமது பாரம்பரிய நாடக மரபுகளைப்பேணி சர்வதேச அரங்கிலேயே பாராட்டுக்களைப்பெற்றிருக்கின்றார்கள் எமது பிரதேசத்திலிருந்து சிங்கள மக்களிடம் சென்றடைந்த கூத்துமரபுகள் 'நாடகம்' என்ற வடிவில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. (இ-5)

## சீரற்ற பாதை

கோப்பாய், ஜூன் 6

நீர்வேலிச் சந்தியில் இருந்து மாசுவன் சந்தி வரையுள்ள பாதை கடந்த 3 வருடங்களாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. [ந-72]

## விசேட பரீட்சை பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஜி. சி. ஈ. சாதாரண தர விசேட பரீட்சையை நடத்துவதற்கான ஒழுங்குகள் குறித்து பரீட்சைத் திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கு யாழ்ப்பாணப் பிரதம கல்வி அதிகாரி திரு கே. சோமசுந்தரம் கொழும்பு செல்கிறார்.

தடைப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் ஜூலைமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது தெரிந்ததே.

இப்பரீட்சைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் பற்றி கலந்துரையாடுவதற்கு கொழும்பு வருமபடி பரீட்சைத் திணைக்களம் உத்தரவிட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்தே திரு. கே. சோமசுந்தரம் கொழும்பு செல்கிறார். [ஒ-05]

## பதற்றத்துடன் இரவைக்கழித்த புத்தூர் மக்கள்

அச்சுவேலி, ஜூன் 6

கடந்த வெள்ளிக்கிழமை இரவு புத்தூர்ப் பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

வெளிச்சக் குண்டுகள் வானத்தை நோக்கி வீசப்பட்டன சில நிமிட நேரம் தொடர்ச்சியன துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன

திடீரென கேட்ட ஒரு பெரிய குண்டுச் சத்தத்தை அடுத்து தொடர்ச்சியான துப்பாக்கிச் சூடும் வெளிச்சக் குண்டு வீச்சும் நடைபெற்றதால் புத்தூர் மற்றும் அயல் கிராமங்களில் குடியிருக்கும் மக்கள் அச்சமடைந்த நிலையில் செய்வதறியாது வீடுகளுக்குள் பதுங்கியிருந்தனர். அந்த இரவை அவர்கள் விழித்திருந்து பதற்றத்துடன் கழிக்க வேண்டியதாயிற்று [ஒ-11]


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள புளோவர்ஸ் (Blowers), ஹெல்பர்ஸ் (Helpers) குமிழர்கள், (Bubblers) தேவை. அத்துடன் சம்பளத்துடன் வேலை பழகுவதற்கு இளைஞர்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு. நேரில் வரவும்

மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை
த பெனின்சுலா குறூப்
அரஸ்கோ கட்டிடம்
163, கண்டி வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்.

[3365]



## PATRICIAN INSTITUTES

### பற்றிஸியன் இன்ஸ்ரியூட்ஸ் தொழினுட்ப பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்

Trade Diploma Courses

பாடசாலை படிப்பு முடிந்து வெளியேறும் மாணவர்களின் நலனிறகாவும் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் வேலை பெறத்தக்க முறையிலும் காலை, மாலை, வார இறுதி வகுப்புகள் பலவருட தொழினுட்ப அறிவுபெற்ற போதனாசிரியர்களால் மிகச் சிறந்த முறையில் அதிகளவு செய்முறை, அறிமுறை பயிற்சிகளுடன் மிக் குறைந்த தவணைக் கட்டணங்களில் நடாத்தப்படுகின்றன.

**6 மாத கால பயிற்சி நெறிகள்:**

(1) Dipl ma in Computer Programming [கொம்பியூட்டர் புரோகிராமிங்]
Weekend Courses-Lectures in A. C. Room
(2) City and Guilds of London Exam "Quantity Surveying" Part I and II
(3) Draftsmanship [கட்டிடப் படம் வரைதல்]
(4) Motor Mechanism [மோட்டர் மெக்கானிசம்]

Tamil and English Medium

**3 மாத கால பயிற்சி நெறிகள்:**

(5) Electrical House wiring [வீட்டு மின் இணைப்பு]
(6) Lathe Operation [கடைச்சல் இயந்திர இயக்குநர்]
(7) Arc Welding [மின் ஒட்டுவேலை]
(8) Plumbing [நீர்க்குழாய் இணைப்பு]

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் எதிர்வரும் 13-6-88 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகின்றது.

★ மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மேலதிக விபரங்கட்கு:
REGISTRAR,
**Patrician Institute of Higher Studies**
59, St Patrick's Road, Jaffna.
(சி-5202)


ஆரம்ப ஒதுக்கீடாக

# சுண்டுக்குளி தபாலக திருத்த வேலைக்கு ரூ25, 000

சுண்டுக்குளி தபால் நிலையத்தின் திருத்த வேலைகளுக்கு ஆரம்ப ஒதுக்கீடாக 25 ஆயிரம் ரூபாவை யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வழங்கியுள்ளார்.

இந்தப் பணம் கட்டிடத் திணைக்களத்தின் யாழ் கிளையிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ் கட்டடத் திணைக்கள கண்காணிப்பு பொறியியலாளர் உதயனுக்குத் தெரிவித்தார்

சுண்டுக்குளி தபால் நிலையத் திருத்தத்திற்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா தேவையாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கென அரச அதிபரால் முற்பணமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது

இந்தப் பணத்தைக் கொண்டு அடுத்த வாரமளவில் திருத்த வேலைகளை ஆரம்பிக்க உள்ளோம் —என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ 9)

ப.நோ.கூ. சங்கங்களுக்கு நிதி உதவி

# கண்காணிக்க இருவரை நியமிப்பது குறித்து ஆட்சேபம்

காங்கேசன்துறை, ஜூன் 6

"யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிதியுதவியைக் கண்காணிப்பதற்கு இரு பிரதிநிதிகளை நியமிக்கும் முயற்சி, சங்கத் தலைவர்களையும், இயக்குநர் சபையினரையும் அவமதிக்கும் செயலாகும்"

இவ்வாறு யாழ் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவரும், தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத் தலைவருமான திரு எஸ் சிவமகாராசா யாழ் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்

யாழ் குடாநாட்டு ப.நோ. கூ. சங்கங்களுக்கு அவற்றின் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக நிதியுதவி செய்ய ஏற்பாடு செய்துள்ளது தெரிந்ததே.

இந்நிதியுதவி வழங்கப்படுவது குறித்து திரு எஸ் சிவமகாராசா அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1987 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச உணவு விநியோகத்தில் சங்கத்திற்கு ரூபா 120 லட்சத்துக்கு மேலாக சங்கத்திலிருந்து வரவேண்டியதாக பல மாதங்கள் இருந்தும் கூட நாம் எமது சேவையை நிறுத்திவிடவில்லை. கடந்த அக்டோபர் மாத நெருக்கடியின் போது அக்டோபர் 14 ஆம் திகதி முதல் சேவை செய்து வருகின்றோம்.

எந்த ஒரு நேரத்திலும் நிதி நெருக்கடியிலும் சமாளித்து செயலாற்றிய எமக்குத் தாங்கள் நிதியுதவி அளிப்பதை கண்காணிக்க இரு பிரதிநிதிகளை நியமிப்பது எம்மீது நம்பிக்கையில்லை என்பதையே காட்டுகிறது ஏதாவது ஒரு சங்கம் பிழைவிட்டிருந்தால் அச்சங்கத்திற்கு காரணம் காட்டி கண்காணிப்பாளர்களை நியமனம் செய்யலாம்.

தயவுசெய்து எல்லா சங்கங்களுக்கும் கண்காணிப்பாளர்களை நியமிப்பது எம்மை அவமதிப்பது போலாகும். இம்முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று உள்ளது (அ-68)

# காப்புறுதிச்சபை மூலம் விவசாயிகள் பெரும் நன்மை

## பணிப்பாளர் விளக்கம்

மாவிட்டபுரம் ஜூன், 06

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மூலம் பெறப்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு தெரியாமல் இருக்கிறது.

ஓய்வூதியத் தொகை ஒருபுறம் இருக்க, இயலாமையோ, இழப்புகளோ ஏற்படும் நேரத்தில் கமத்தொழில் காப்புறுதிச்சபை முன்னர் கொடுக்க இருந்த தொகையின் இரண்டு மடங்கு தொகையை தற்போது வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.

மத்தொழில் காப்புறுதிச்சபையின் யாழ்ப்பாணம் — கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திரு சுப்பையா சிவகுரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடப்பு வருடத்தில் 537 விவசாயிகள் பென்ஷன் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

சுமார் 1000 விண்ணப்பங்கள் வரை இதற்கென பரிசீலனையில் உள்ளன.

ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வரை கட்டுப்பணமாக இதுவரை கிடைத்துள்ளது

அதில் சேர்ந்த 40 சதவிதமான விவசாயிகள் 35 வயதுக்கும், 60 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

60 சதவீதமானோர் 18ல் இருந்து 35 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

இளம் வயதினர் இத் திட்டத்தில் சேர்வதால் கூடுதலான பணத்தை பென்ஷன் தொகையாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

ஜூன் மாதத்தில் மேலும் ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தில் பூரணமாக சேர்க்கப்படவுள்ளனர்

இயலாமை அல்லது இழப்பு ஏற்படும் நேரத்தில் அவரவு வயதைப் பொறுத்த 12 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வழங்கப்படவுள்ளது.

இறப்பு ஏற்படும் சந்தர்பங்களில் இத்தொகையின் அரைப்பங்கும் கட்டிய பணமும், அதற்கான வட்டியும் சேர்த்து இறந்தவரின் உரிமையாளருக்கு வழங்கப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினர். (சி-90)

# ஒலிபெருக்கியில் அறிவித்தல் செய்தோரை படையினர் கலைந்துப் பிடித்தனர்

குருநகர் ஜூன் 6

ஒலிபெருக்கி வாகனத்தில் 'அற்ஹோம்' விருந்துபசார அறிவித்தல் செய்துகொண்டிருந்தவர்களை இந்திய அமைதிப் படையினர் மூன்று வாகனங்களில் கலைத்துப் பிடித்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை குருநகர் தொடர்மாடிப் பகுதியில் இடம்பெற்றது

ஒலிபெருக்கி வாகனமும், அறிவித்தலில் ஈடுபட்ட மூவரும் குருநகர் அமைதிப் படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டனர்.

மேற்படி அறிவித்தல் செய்யும் நகர் ஐக்கிய முன்னணி முன்னதாக அனுமதியைப் பெற்றிருந்தது என்று சொல்லப்படுகின்றது

சம்பவத்தை அடுத்துக் குருநகர் ஐக்கிய முன்னணியினர், முகாம் பொறுப் திகாரியைச் சந்தித்து விளக்கம் கொடுத்தனர்.

மாலை 4 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கி வாகனம், சாரதி, அறிவிப்பாளர், ஒலிபெருக்கி இயக்குனர் ஆகியோர் விடுவிக்கப்பட்டதுடன் அறிவித்தலை தொடர்ந்து செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டது. (ஒ-51)


தேநீர் பிரியர்களுக்கோர் சுவையான செய்தி!!
இலங்கையிலே முதன் முறையாக
வடமாகாணத் தண்ணீர்க்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த தேயிலை!!

# "தங்கம் தேயிலை" "TANGAMM TEA"

நிறைந்த சுவை! அதிக கூடிய சாயம்!!
100 gr. 50 gr 25 gr, பக்கெட்டுகளில் எங்கும்
★ பரபரப்புடன் விற்பனையாகின்றது ★
100gr.- 7/25 50gr.- 4/- 25gr.- 2/25

தேநீர் தயாரிக்கும் முறை:-

ஒரு தேக்கரண்டி 'தங்கம் தேயிலையை' நன்றாகக் கொதித்த ஒரு கோப்பை தண்ணீரில் கலந்து இரண்டு நிமிடத்திற்கு மூடி வைக்கவும். நன்றாகக் கலக்கிய பின் மீண்டும் இரண்டு நிமிடத்திற்கு மூடி வைக்கவும். தேயிலையை வடித்த பின் பாலும், சீனியும் அளவுடன் சேர்த்துப் பரிமாறவும்

ஏகவிநியோகஸ்தர்:- **மெடிக்கல் ஹோல்**
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்:-
**Ceylon Commodity Marketing[Pvt.] Ltd.**
**P. O. Box - 640, Colombo.**

குறிப்பு: 1. தங்கம் LOOSE தேயிலை 20 Kg. பெட்டிகளிலும் விற்பனைக்குண்டு
2. வெகுவிரைவில் மாபெரும் பரிசுப் போட்டியை எதிர்பார்த்து வெற்றுப் பக்கெட்டுக்களைச் சேகரியுங்கள். [C/5184]



உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்க

உழைக்கும்போதே சிறுகச் சிறுகச் சேமியுங்கள்...........

சேமிப்புக்கு வழிகாட்டி **"ஷப்ரு"**

மாதாந்த சேமிப்பு
உயர் வட்டியுடன்
உங்கள் கைகளுக்குக் கிடைக்க
'ஷப்ரு'வை நாடுங்கள்

மாதாந்தம் ரூபா 500 சேமித்தால்
**36 மாதங்களில் ரூ. 23216/35**
கிடைக்கும்.

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக 12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன்மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

**ஷப்ரு**
**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**
61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவலகளை தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்,

பெயர்: ..............................
விலாசம்: ..............................
தொழில்: ..............................

(C/5163) கையொப்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### நாய்களுடன் தேடுதல்

உருநகர், ஜூன் 6 வடமாட்சி கிழக்கில் உள்ள கண்டிக்குளம் பகுதிக்கு இந்திய அமைதிப் படையின் கூர்க்காப் படையினர் நாய்கள் சகிதம் சென்றுள்ளனர்.

கண்டிக்குளம், வண்ணன் குளம், கட்டைக்காடு பகுதிகளில் உள்ள காடுகளில் அமைதிப்படை தேடுதல் நடத்துவதற்கு நாய்களையும் பயன்படுத்தி வருகின்றனர். [ஒ 5]

### ஓராண்டு நினைவுநாள்,

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அச்சுவேலி முற்றுகையின் ஓராண்டு நினைவுநாள் இன்று 6 ஆம் திகதி திங்கட்கிழமையாகும். இது இப்பகுதியில் அமைதியான முறையில் நினைவு கூரப்படும். (ஒ 11)

# வெளி இடங்களிலிருந்து

## கால்நடைகளைக் கொண்டுவருவதை

## தடை செய்யக் கோரிக்கை

பாணிப்பாய், ஜூன் 6 வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் ஆடு மாடு போன்ற கால்நடைகளைக் கொண்டு வருவதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

கால்நடை வளர்ப்போர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு திரு எஸ். மோகனதாஸ் தலைமை வகித்தார்.

வன்னிப் பகுதியில் கால்நடைகளுக்கு வேகமாகப் பரவிவரும் கோமாரி நோய் யாழ். மாவட்டத்துக்குள் பரவாமல் தடை செய்யும் நோக்கத்துடனேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்குள் கால்நடைகளை உணவுக்காக அல்லது வளர்ப்புக்காக கொண்டு வர வேண்டுமானால் மிருக வைத்தியர், கிராமசேவையாளர், அரசாங்க அதிபர் போன்றோரின் சிபாரிசுகளைப் பெற்ற பின்பே கொண்டு வர வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம் என்ற பெயருடன் இயங்கிவந்த இச்சங்கம், அதன் நன்மை கருதி யாழ் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் என பெயர்மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. [இ-90]

### யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட

## தபாற் பெட்டிகளை திருத்த ஏற்பாடு

### அமைதிப்படையினர் நடவடிக்கை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சேதமடைந்திருக்கும் தபால் பெட்டிகளைத் திருத்தம் செய்வதற்கு இந்திய அமைதிப் படையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 60 தபால் பெட்டிகள் சேதமடைந்திருப்பதாக தபாலக வட்டாரங்களை ஆதாரம் காட்டி உதயனில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

இது குறித்து இந்திய அமைதிப்படையின் உயரதிகாரிகள் யாழ். தபாலகத்துக்குச் சென்று பிரதம தபால் அதிபருடன் பேச்சு நடத்தினார்கள். அப்போதே சேதமடைந்த தபாற் பெட்டிகளை திருத்துவதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைதிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ10)

## இணற்றில் கட்டி இறக்கி கல்லால் தாக்கினராம்

## படையினர் மீது புகார்

யாழ்ப்பாணம், ஜூன் 6 வவுனியா— முல்லைத்தீவு வீதியில் அரச பஸ்ஸில் இருந்து என்னைக் கைது செய்த இந்திய அமைதிப் படையினர் கிணற்றில் கட்டி இறக்கி கல்லால் எறிந்து தாக்கினர்.

சுப்பிரமணியம் மோகன் வயது 25 என்பவர் யாழ் பொலீஸ் பிரிவில் மேற்கண்டவாறு முறையிட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியைச் சேர்ந்தவர்.

சம்பவம் பற்றி இவர் மேலும் பொலீஸில் முறையிட்டுள்ளதாவது -

கடந்த மார்ச் மாதம் பதினைந்தாம் திகதியில் வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி அரச பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். இரணைமடு இந்திய இராணுவ முகாம் முன்பாக வாகனம் சோதனைக்காக நிறுத்தப்பட்டது.

படையினர் என்னைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

ஐந்து நாட்கள் முகாமில் என்னை வைத்திருந்த படையினர் நீ எல்.ரி.ரி.யா? எனக் கேட்டுத் தாக்கினர்.

நான் இல்லை என்று கூறியும் கேளாது என்னை கிணற்றுக்குள் கட்டிப் போட்டு கல்லால் எறிந்து தாக்கினார்கள்.

பின்னர் கிணற்றிலிருந்து பிடித்து ஏற்றிவிட்டு கூறினார்கள்.

ஏறிவரும் போது மீண்டும் திருப்பி கல்லாலும், பொல்லாலும் தாக்கினார்கள் கிணற்றுக்குள் தள்ளி விட்டார்கள்.

ஐந்து நாட்களின் பின்னர் என்னை புளியங்குளம் இராணுவ முகாமுக்கு அனுப்பினார்கள்.

அங்கு 20 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டேன். பின்னர் வவுனியா முகாமில் 31 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டேன்.

இப்படி அவர் கூறினார்.

தற்பொழுது இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-10

## கடந்த 7 ஆண்டுகளில் நெற்பயிர் இழப்புக்காக

## ரூ 30 லட்சம் வழங்கப்பட்டது

மானிப்பாய், ஜூன் 6 யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் கடந்த ஏழு ஆண்டு காலத்தில் 30 லட்சத்துக்கு அதிகமான பணத்தை நெற்பயிர் இழப்புக்காக விவசாயிகளுக்கு விவசாயக் காப்புறுதிச்சபை வழங்கியுள்ளது.

இவ்வாறு கமத்தொழில் காப்புறுதிச்சபை யின் யாழ்ப்பாண பாவட்டப் பணிப்பாளர் திரு. சு. சிவகுரு தெரிவித்தார்.

கமத்தொழில் காப்புறுதிச் சபை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நெற்பயிர்காப்புறுதி, கால்நடைக்காப்புறுதி ஆகியவற்றை செயல்படுத்தி வருகின்றது.

கால்நடை இழப்புக்கள் ஏற்படுமிடத்தில் கால்நடையின் உண்மையான பெறுமதியில் எண்பது சதவீதமான பணத்தை உடனுக்குடன் வழங்கி வருகிறது எனவும் அவர் கூறினார். (சி-90)

### மேலும் அறுவர் அனுமதி

வடமராட்சி ஜூன் 6 அமைதிப் படையினர், தம்மைத் தாக்கியதாகக் கூறி மேலும் சிலர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அவர்களில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மேலும் அறுவரின் விபரம் வருமாறு:-

விசுவலிங்கம் இரத்தினையா வயது 27) பருத்தித்துறை கணபதிப்பிள்ளை தோமஸ் வயது15) உடுபிட்டி - சின்னையா வேலாயுதம் (வயது 55) தும்பளை.

பொன்னையா துரையப்பா (வயது 72) புலோலி. நடனசிகாமணி - மாணிக்கராஸ் (வயது 29) பருத்தித்துறை – இன்னத்தம்பி ரவீந்திரன் (வயது 22) (ஓ-16)

### சித்திரத்தேர்

மண்டைதீவு சித்தி விநாயகர் ஆலயத்துக்கு சுமார் 3 இலட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. (ஆ-88)

## யாழ்ப்பாணம் பஸ்கள்

### திருமலையில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6 யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்குக் கடந்த மூன்று நாட்களாகச் சென்ற பஸ்கள் அங்கு பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இங்கு சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 3-ராம் சாலைக்குச் சொந்தமான மூன்று பஸ்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது.

பஸ்களுடன், சாரதிகளும், நடத்துனர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயணிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக இன்று முதல் திருகோணமலைக்கான போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ஒ-9 10)

### பாடசாலைகளுக்கு இலவச மாங்கன்று

மானிப்பாய், ஜூன் 6 யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம், யாழ் மாவட்ட பாடசாலைகளில் பயனுள்ள பழமரங்களை நடும் நோக்குடன் மாமரக்கன்றுகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ளது.

பாடசாலை அதிபர்கள் தாது பாடசாலை வளவுகளில் நடக்கூடிய மாமரக் கன்றுகளை தங்கள் பகுதி விவசாய உத்தியோகத்தர்கள் மூலமாக அல்லது நேரடியாக விவசாய திணைக்களப் பணிமனைக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-90)

## விளையாட்டு அரங்கு

## ஜொலிஸ்ரார்ஸ்வெற்றி

யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகக் 'கறுப்பு' அணிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

பிள்ளையார் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்திலேயே ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கு இந்த வெற்றி கிடைத்தது.

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த முதல் வது அரையிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்து ஆடியது.

இந்த அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். பி. கௌரிசங்கர் 33, தே. பிரேம்நாத் 23, சுபேந்திரன் 21, எஸ். சுரேஸ் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜெய்சங்கர் 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், ரகுராம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய ஜொனியன்ஸ் 'கறுப்பு' அணி 22 5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

சுதேசன் 16, நரேஸ் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ் பி பிரபானந்தன் 2, தபேந்திரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் ஜொலிஸ்ரார்ஸ் அணி மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆடத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை நேற்று நடைபெற இருந்த இரண்டாவது அரை இறுதி ஆட்டம் நேரம் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டது. (க)

## ஜொனியன்ஸ் சிவப்பு அணி வெற்றி

பிள்ளையார் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக 'சிவப்பு' அணி வெற்றி பெற்றது.

"ஷப்றூ" கிரிக்கெட் அணிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட இந்த கிரிக்கெட் போட்டியில் 16 ஓட்டங்களால் ஜொனியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக அமைந்தது.

ஸ்கோர் விபரம்:-

ஜொனியன்ஸ் 30 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்கள்

சி. சூரியகுமார் 67, ஆர் மகிந்தா 42, ஜி நேசகுமார் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்கள்.

அன்ரு - கிறேசியன் 3, எல்மோ போல் 2, வை. ஜெயந்தன் 2 விக்கெட்டுகள்,

'ஷப்றூ' 29 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்கள்.

முருகவேள் 62, அன்ரு கிறேசியன் 41 ஓட்டங்கள்

ஆர், மகிந்தா 3, சி. சூரியகுமார் 2, எஸ், ரி, அகிலன் 1, ரி, சஞ்சீவன் 1, ரவீந்திரன் 1 விக்கட்டுகள். (இ-க)

### 1 ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை ஆனந்தன் [பெரியமணி]

விவசாயத் திணைக்களம் (களஞ்சியப் பொறுப்பாளர் -S.K)

ஜனனம் 1934-11-15 ஜன்னியம் 1987 06 17

திதி: 1988 06 06

அன்பின் திருவுருவாய் திகழ்ந்த எமது தலைவரே உங்கள் திருமுகத்தை எப்போது காண்போம்.

தங்கள் மனைவி, பிள்ளைகள்

(4359)

### 31 ஆவது நாள் நினைவஞ்சலி



உடுவில் கிழக்கைச் சேர்ந்த

சரவண முத்து - செல்லத்துரை

[பெ. சிஸ் பென்சனியரும் சீமாசிக் ஜீன்டஸ் றீஸ் லிமிட்டட் பாதுகாவலரு )

பிறப்பு 22-01-1909 இறப்பு 06-05-1988

அன்புத் தெய்வமே!

நீ எங்களை விட்டுப் பிரிந்து 31 ஆவது நாளில் உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, மக்கள், மருமகன், பேரன்.

அர்ச்சையார் தோட்டம், உடுவில் கிழக்கு, சுன்னாகம்

[4 046]

### ஓராண்டுநினைவஞ்சலி!



செல்வன் கந்தையா நவநிதி (பவான்)

அன்னை மடியில்: 23-4-1966 மண் மீட்பில்: 6-6-1987

திதி: 26-5-1988

தமிழர் தம் பாலைக்காத்த தரணியை மீட்கவெனத் தணியாத தாகங்கொண்ட தவப்புதல்வா நீ சென்றுவிட்டாய் களத்தினிலே புகுந்து நீயும் களத்தினிலே உயிர் துறந்தாயே. கலங்கின்றோம் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம் காணிக்கையாக


அண்ணன் சுட்டெட்ட போல் ஆவிகளை ஈந்தவனே. எண்ணங்களில் வாழ்கிறாய் எம் அன்புச் சகோதரனே. நேசமிகு நெஞ்சப் பூங்காவில் பூத்திருந்த பாசமலர் நாம் தொடுத்து பாத அஞ்சலி செலுத்திடுவோம்

மறத்தமிழர் மரபினிலே மறையாத இடம் பெற்றாய். கருத்தழியாக் கண்மணியே கண்டெடுத்த நவநிதியே தீராத வேள்வித் தீயினிலே தீய்ந்திட்ட எம் வீராதி வீரனின் வீரத்திற்கு அஞ்சலி

பெற்றோர் சகோதரர்கள், அண்ணிமார், மைத்துனர்கள் நண்பர்கள்

(C.5298)

### நினைவு அஞ்சலி



வல்லிபுரம் கார்த்திகேசு

தோற்றம்: 14 04 1903 நிறைவு: 06-05-1988

இல்லத் தொளிவிளக்காய்
எமக்கு வழிகாட்டி
நல்லன எனுமெல்லாம்
நாம் பெறவே செய்திட்ட
அன்பு நிறை தந்தையவர்
ஆத்மாவின் சாந்திக்காய்
தூப மகற்றும்
தூபவனின் தாள் பணிந்தோம்.

சந்நிதி வீதி, தம்பாலை, அச்சுவேலி.

மனைவி மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4049)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

பொருள்:

செய்யத் தொடங்கிய செயல், கொண்ட பகை என்று இவ்விரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால், தீயின் குறைபோல் தெரியாமல் வளர்ந்து கெடுக்கும்.

உதயன்

உண்மை - நடுநிலைமை - தமிழ் - நேர்மை

இல. 328/1 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
06-06 1988 க பெ. இல 88

## வடக்கும், கிழக்கும்

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைத்து ஒரே ஆட்சி நிர்வாகம் நடத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம் வகை செய்கிறது எனினும் அது தற்காலிக வசதி கிழக்கும், வடக்கும் நிரந்தரமாகச் சேர்ந்து இருக்க வேண்டுமா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு கிழக்கு மாகாண மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் கபடம் நிறைந்த ஓர் ஏற்பாடு

பிரிட்டிஷ்காரர் இந்த நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர் வடக்கும் கிழக்கும் ஒன்றாகவே இருந்தன ஆதலால் வடக்கையும், கிழக்கையும் இணைப்பது என்று சொல்வதற்குப் பதிலாக, தமிழர் தாயகத்தில் இருந்து கிழக்கையோ, வடக்கையோ பிரிக்கக்கூடாது என்று சொல்வதே, செய்வதே மெத்தப் பொருத்தமான நிலையாகும்

இந்த இணைப் (பிரிக்காமை) விவகாரத்தில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகரான ஜனாப் ஈஸ்ரர் இப்ராஹீம் புதிய கருத்து ஒன்றை முன் வைத்திருக்கிறார்.

கிழக்குடன் வடக்கை இணைப்பது என்ற அணுகுமுறையை நாடாது, வடக்குடன் கிழக்கை இணைப்பது என்ற எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும். இதுவே அவரது புதிய கருத்தாகும்.

கிழக்குடன் வடக்கை இணைப்பது என்ற ரீதியில் செயற்பட்டால், கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் மிஞ்சியுள்ள பிரதேசங்களையும் சிங்களக் குடியேற்றம் விழுங்கிவிடும். அது மட்டுமன்றி வடக்கையும் சிங்களக் குடியேற்றம் பிழுண்டிக் கொள்ளும் என்பது அவரது கருத்து,

ஆகையால் கிழக்கோடு வடக்கை இணைப்பது என்ற எண்ணத்தோடு செயற்படாது வடக்கோடு கிழக்கை இணைப்பது என்று செயற்பட்டும்—

கிழக்கை அங்கு இப்போது அதி உச்சக் கட்டத்தில் நடக்கும் சிங்களக் குடியேற்றத்தில் இருந்தும், வடக்கில் அந்த நிலை ஏற்படாது தடுக்கவும் வகை செய்ய வேண்டும்—

இந்தப் பொறுப்பும், செய்யக்கூடிய மனோதிடமும் வடபகுதி மக்களுக்கு வரவேண்டும் என்பது அவரது கோரிக்கை.

கிழக்கில் உள்ள அம்பாறையிலும், திருகோணமலையிலும் சிங்களக் குடியேற்றம் எந்தளவுக்கு நடந்திருக்கிறது என்பதை அவர் புள்ளி விவரங்களுடன் விளக்கி இருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பிரித்து, மிகப் புதிதாக உருவாக்கப்பட்ட அம்பாறையில் மொத்தமுள்ள 1,175 சதுர மைல் நிலப்பரப்பில் 900 சதுர மைல் சிங்களவர் வசம் போய்விட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் 1048 சதுரமைல் நிலப்பரப்பில் 700 சதுர மைல் இப்போது சிங்கள மக்கள் கைக்கு மாறி விட்டது.

இந்த நிலையில் வடக்குடன் கிழக்கைச் சேர்த்தால் தான் தமிழ்பேசும் மக்களுக்கு இப்போது உள்ள மண்ணையாவது பாதுகாக்க முடியும் என்பது ஜனாப் இப்ராஹிமின் வாதம்.

இந்தப் புதிய கருத்தை ஏற்றுச் செயற்பட வடபகுதி மக்கள் முன்வருதல் அவசியமே.

அதேவேளை வடக்கிலேயே சிங்களக் குடியேற்றப் பிரச்சினை முல்லைத்தீவு மாவட்டத்தில் பூதாகரமாக உருவெடுத்து வருவதை நாம் மறந்து விடலாகாது

வடக்கிலும் ஒரு சிங்களத் தொகுதியை உருவாக்கி, ஒரு சிங்களவரை எம். பி. யாக்கிவிட முழுமூச்சில் சிங்களப் பேரினவாதம் செயற்பட்டு வருகிறது. வெலிஓயா என்ற புதிய இடம் பனிமுறிப்பு முதல் பறையனாறு வரையான 15 பூர்வீக தமிழ்க் கிராமங்களை அழித்து, தமிழர்களை விரட்டி உருவாக்கப்பட்டிருக்கிறது அங்கு 3,458 சிங்கள வாக்காளர்களும் பதியப்பட்டிருக்கிறார்கள்!

மாகாண சபைகளுக்கு உள்ள காணி சம்பந்தமான அதிகாரங்கள் மூலம் இவ்வாறான மண்பறிப்புகளைத் தடுக்க முடியுமா என்பதை ஒப்பந்தம் குறித்துப் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் இந்தியா ஆராய வேண்டும்.

ஒப்பந்த அமுலுக்கு இணங்குமாறு தமிழர் தரப்பை வலியுறுத்தும் இந்தியா—

சிங்களக் குடியேற்றத்தையும் தடுக்க, ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், கடந்த பத்து மாதங்களாக அரச ஆதரவுடன் நடந்த சிங்களக் குடியேற்றங்களையாவது வாபஸ் செய்விக்க நடவடிக்கை எடுக்குமா?

காணி விவகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள், தமிழர் தாயகத்தின் மண்ணைப் பறிக்காமல் இருக்க வகை செய்யும் விதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசிடம் வற்புறுத்துமா?

பலஸ்தீனப் பிரச்சினை:

# ஐ. நா.வின். மேற்பார்வையில் சர்வதேச மாநாடு கூட்டுக!

டமஸ்கஸ், ஜூன் 5
பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச மாநாடு ஒன்று ஐ. நா. மேற்பார்வையில் கூட்டப்பட வேண்டும்.

சிரியாவும் இந்தியாவும் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்து உள்ளன.

பிரதமர் ராஜீவ்காந்தி டமாஸ்கஸில் சிரிய ஜனாதிபதி ஆஸாத்துடன் பேச்சுக்கள் நடத்தினார். அதன் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இது வலியுறுத்தப்பட்டது.

கூட்டப்படவுள்ள சர்வதேச மாநாட்டில் பலஸ்தீனிய விடுதலை இயக்கம் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இந்தியாவும் சிரியாவும் கூட்டாக வேண்டுகோள்

இதனிடையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் எகிப்து விஜயத்தை முடித்துக் கொண்டார்.

இரண்டு சுற்றுப் பேச்சுக்களை அவர் எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குடன் நடத்தினார்.

பேச்சுக்களில் மத்திய கிழக்குப் பிரச்சினை பற்றியே பேசப்பட்டது.

அடுத்த கட்டமாக திரு. ஷுல்ட்ஸ் இஸ்ரேல் செல்ல உள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

வெளி உலகில்

## லண்டன் கடற்கரையில் பிளாஸ்டிக் பைகளில் கொக்கெயின் போதைவஸ்து

லண்டன், கிழக்குப்பகுதி நகரான பிரைட்டனின் கடற்கரையில் பதினொரு பிளாஸ்டிக் பைகளில் கொக்கெயின் போதைவஸ்து கிடக்க நேற்று கண்டு பிடிக்கப்பட்டது.

இப் போதைவஸ்துவின் பெறுமதி 20 லட்சம் பவுண் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எப்படி இந்தப் பிளாஸ்டிக் பக்கட்டுக்கள் கரையில் ஒதுங்கின என்பது குறித்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர் என்று பி.பி.சி வானொலி அறிவித்தது.

கப்பல் நடமாட்டங்களையும் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

இப் போதைவஸ்து யாரால் யாருக்கு எங்கிருந்து அனுப்பப்பட்டது போன்ற விவரங்களைச் சேகரிப்பதில் அதிகாரிகள் நேற்று ஈடுபட்டிருந்தனர். [எ]

மேற்கு ஜெர்மனி:

## சுரங்க வெடிவிபத்தில் 'இறந்தவர்' உயிருடன் மீட்பு!

பொன், ஜூன் 5
உயிரிழந்தவர்கள் என்று கைவிடப்பட்ட சுரங்கத் தொழிலாளர்களில் எட்டுப்பேரை மூன்று தினங்களின் பின்னர் உயிருடன் மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் காப்பாற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

மேற்கு ஜேர்மனியில் கடந்த புதன்கிழமை தங்கச் சுரங்கம் ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டது.

அதில் 33 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. ஏனைய 24 பேர் காணாமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் இறந்து போயிருக்கலாம் என்று கருதி மீட்பு நடவடிக்கையும் கைவிடப்பட்டது.

அதற்கு மூன்று தினங்கள் கழித்து 8 பேர் உயிருடன் 300 அடி ஆழத்தில் இருந்து அதிஷ்டவசமாக மீட்கப்பட்டனர்.

இப்போது ஏனையோரும் உயிருடன் இருக்கலாம் என்று கருதப்பட்டு மீட்புப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது (எ)

### அனுமதி மறுப்பு

மாஸ்கோ, ஜூன் 5
மாஸ்கோவில் நடக்கும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்க மாநாட்டில் கலந்து கொள்ள இஸ்ரவேலைச் சேர்ந்த பத்து சட்டத்தரணிகளுக்கு விஸா வழங்கப்படவில்லை.

சோவியத் அரசு அவர்களின் விஸா விண்ணப்பங்களை நிராகரித்து விட்டது என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## அன்னை திரேஸா அமெ. கைதிகளுக்கு ஆறுதல் கூறினார்

கைதி ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க அன்னை திரேஸா நேற்று அமெரிக்காவில் பொஸ்டனில் உள்ள மூன்று சிறைகளுக்கு விஜயம் செய்தார்

பொஸ்டன் சிறை ஒன்றில் 18 ஆண்டுகால சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி இரண்டு ஆண்டுகளாக அன்னை திரேஸாவுக்குக் கடிதம் எழுதி வந்தார்.

சிறைக்கு வந்து நேரில் சந்தித்து ஆறுதல் அளிக்கும்படி அவர் அன்னையை வலியுறுத்திக் கடிதங்களில் கேட்டு வந்தார்.

அன்னை திரேசா இது குறித்து அமெரிக்க அரசுக்கு கடிதம் எழுதி அண்மையில் அனுமதி பெற்றார்.

நேற்று பொஸ்டனில் அந்தக் கைதி உள்ள சிறைக்கு அன்னை சென்றார் உணர்ச்சி பூர்வமான வரவேற்பை கைதிகள் அவருக்கு அளித்தனர். அதிகாரிகள் அனுமதியுடன் வேறு இரண்டு சிறைகளுக்கு அன்னை திரேஸா சென்றார்.

சுமார் 500 கைதிகள் கண்ணீர் சொரிந்த வண்ணம் அன்னையை வரவேற்றனர் பெரும்பாலான கைதிகள் கொலைக் குற்றங்களுக்காக நீண்டகால சிறைத்தண்டனை அனுபவிப்பவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## இந்தோனேஷியா மீது போர்த்துக்கல் கண்டனம்

இந்தோனேஷியாவினால் கைப்பற்றப்பட்டிருக்கும் கிழக்கு திமோர் தீவில் நடைபெறும் சுதந்திரப் போராட்டத்தைப் போர்த்துக்கல் ஆதரிக்கிறது

இத்தகவலைப் போர்த்துக்கல் ஜனாதிபதி திரு. சோலார்ஸ் மணிலாவில் வெளியிட்டார்.

கிழக்கு திமோர் தீவு முன்னர் போர்த்துக்கல் ஆட்சியின்கீழ் இருந்துவந்தது

1976இல் இந்தோனேஷியா இத்தீவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

கிழக்கு திமோர் தீவு மக்கள் சுதந்திரம் கோரிப் போராட்டம் நடத்துகின்றார்கள்

இதற்குக் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி என்று இந்தோனேஷியா பெயர் சூட்டியிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது.

இப்படி போர்த்துக்கல் ஜனாதிபதி சொன்னார்.

சர்வாதிகார ஆட்சியில் இருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பிய 12 நாடுகளில் போர்த்துக்கல் ஜனாதிபதியும் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டை பிலிப்பீன்ஸ் அழைத்து இருந்தது. (எ)

## தேர்தல் ஊழல் விசாரணைக்குழு கலைப்பு!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட அரச குழுவை ஜனாதிபதி முகமட் எர்ஷாத் கலைத்துவிட்டார்

பங்களாதேஷ் மக்கள் தேர்தல் முறையில் நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்று குழுவின் ஒரு உறுப்பினரான நீதியரசர் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்தே குழுவை ஜனாதிபதி கலைத்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

புதுக்குடியிருப்பு மக்கள் அவதி

# பாதுகாப்பாக மீளக் குடியேறவும்முடியவில்லை

## நிவாரணமும் இல்லை

புதுக்குடியிருப்பு, ஜூன் 6
இந்திய இராணுவ நடவடிக்கை காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய புதுக்குடியிருப்பு மக்கள் பலர் பாதுகாப்பாக மீண்டும் தமது இடங்களுக்குச் சென்று குடியேற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கான ஊக்குவிப்புப் பணமும் கிடைக்கவில்லை சமீபத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முள்ளியவளை, புதுக்குடியிருப்பு மக்கள் பலர் தமது வீடு வாசல்கள், கமங்களைக் கைவிட்டு வெளியேறி இருந்தனர்.

இவர்களில் முள்ளியவளை மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு கமம் செய்வதற்காக 4000 ரூபாவும் ஊக்குவிப்பு பணமாக வழங்கப்பட்டது

இவர்களுக்கு மேலும் 2000 ரூபா வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(இ-ரி)

## தேர்தல் சீர்கேடுகள்: பொலீஸ் மாஅதிபரிடம் ஆணையாளர் முறையீடு

நடந்து முடிந்த மேற்கு மத்திய மாகாண சபைகள் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சீர்கேடுகள் பற்றித் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா பொலீஸ் மா அதிபரிடம் முறையிட்டிருக்கிறார்.

கொழும்பு மாவட்டத்தில் பல வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு நிலையத்தினுள் உத்தரவு இன்றி ஒருவர் புகுந்து இரண்டு வாக்குச் சீட்டுப் புத்தகங்களை சட்டவிரோதமாக எடுத்துச் சென்றார் என்று முறைப்பாடு வந்துள்ளது என்று தேர்தல் ஆணையாளர் தனது புகாரில் தெரிவித்திருக்கிறார்

இது பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ் மா அதிபரைப் பணித்திருக்கின்றார் (இ-எ)

## ரெலோ இயக்க பிரமுகர் சுட்டுக்கொலை

வெள்ளவத்தைப்பகுதியில் பள்ளிவாசல் ஒன்றின் முன்பாக ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தரான குரு என்பவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொலைப்பட்டார்.

இத் தகவலை வவுனியா ரெலோ அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

கொலை செய்யப்பட்ட குரு ரெலோ இயக்கத்தின் அரசியல் பிரிவு வேலைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்த முக்கியஸ்தர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அமைதிப்படையினர் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அண்மைக் காலமாக புளொட், ரெலோ இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து இந்த இரு இயக்கங்களையும் சேர்ந்த பலரும் காட்டுப் பகுதிகளிலும், [illegible] இடங்களிலும் தலைமறைவாக [illegible] [இ-164]

### வேலை ஆரம்பம்

குருநகர்பகுதியில் கடந்தகால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட குடிமனை வீடுகளைத் திருத்திக்கொடுக்கும் யாழ் மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணக் குடிக்கு அண்மித்த ஐயன்குடா என்ற இடத்திலும் இருந்து குடி[illegible] பூர்வமாக சிறிய வீடுகளை நடுநிலையம் அமைத்து வருகிறது. [இ-51]

## கெனமனின் வாக்குக்கு நேர்ந்த கதி!

கொழும்பு, ஜூன் 6
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமனின் வாக்கை வேறு ஒருவர் போட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

திரு. கெனமன் இத் தகவலை வெளியிட்டார்

மேற்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கச் சென்றேன் தேர்தல் அதிகாரியிடம் எனது பெயரைத் தெரிவித்தேன் அந்தப் பெயருக்குரியவரின் வாக்கு அளிக்கப்பட்டுவிட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

நான்தான் அந்தப் பீட்டர் கெனமன் என்று சொல்லி ஆட்சேபம் தெரிவித்தேன் பின்னர் எனக்கு வாக்குச் சீட்டு ஒன்றைத் தந்தனர்.

அந்த வாக்குச் சீட்டு எண்ணும் போது கணக்கில் எடுக்கப்படமாட்டாது என்பது எனக்குத் தெரியும்

இப்படி திரு. கெனமன் சொன்னார்

(இ-எ)

பிரபாகரனை ராணுவம் சூழ்ந்து நிற்கும்

## செய்தி கேட்டு நான் கண் கலங்கி விட்டேன்

### கருணாநிதி கூறுகிறார்

தூத்துக்குடி, ஜூன் 6
பிரபாகரனை இந்திய இராணுவம் சூழ்ந்து நிற்கின்றது என்ற செய்தி கேட்டு நான் கண்கலங்கி விட்டேன்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தூத்துக்குடியில் நடைபெற்ற தி. மு. க. பொதுக் கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

அப்போது அவர் சொன்னதாவது:

தி. மு. க. எம். பி. கோபால்சாமி இங்கே பேசும் போது, ஈழத்தில் பிரபாகரனை இந்திய இராணுவம் சூழ்ந்து நிற்கிறது என்று சொன்னார்

அதைக் கேட்டதும் நான் கண் கலங்கி விட்டேன்

அப்படி ஒரு நிலைமை வந்தால் தமிழகம் என்ன ஆகும் என்பதை ராஜீவுக்கு நாம் ஏற்கனவே உணர்த்தி வருகிறோம். பிரபாகரன் பிணமானால் தமிழ் நாட்டில் பல பிரபாகரன்கள் உருவாகுவார்கள்.

அந்த ஒரு நிலைமை ராஜீவ் விலை கொடுத்து வாங்க மாட்டார் என நம்புகிறேன்

இலங்கைப் பிரச்சினையை முன் வைத்து போட்டியிடத் தயாரா என்று ரூபன் ஜீர் கேட்டார் தனது தயார் அதுவே ஒரு திருத்தம் தேவம் நீந்த ஆசியை பிடிப்பதற்காகவா இதைச் செய்யவேண்டும்?

இந்திய இராணுவம் ஈழத்தில் விடுதலைப் புலிகள் போராளிகளை, தமிழர்களைக் கொன்று குவித்து வருவது சரியா என ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தத் தயாரா? என்று நான் (6ஆம் பக்கம் பார்க்க)

செய்திக்கொத்து

### வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

கோப்பாய், ஜூன் 6
தற்போது வெங்காயத்தின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது

அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது பெருமளவான விதைகள் பயிரிடப்படவில்லை அத்துடன் விவசாயிகள் தமது வீடுகளில் பாதுகாப்பாக வைத்திருந்த வெங்காயமும் அசம்பாவிதம் காரணமாக கவனிப்பாரின்றி அழுகிவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது
([illegible]-72)

### வடமராட்சியில் 'கால்வாய்'நோய்

பருத்தித்துறை-ஜூன் 6
வடமராட்சிப் பகுதியில் கால்நடைகளுக்கு கால்வாய்நோய் பரவி வருகிறது

வடமராட்சிப் பகுதியில் கால்நடை வளர்ப்போர், பண்ணைகள் வைத்திருப்போர் கத்தைப் பகுதிகளிலுள்ள சமசமூக நிலையங்கள் [illegible] அல்லது [illegible] தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர் [இ-118]

### நீர்வேலியில் கொள்ளை

கோப்பாய் ஜூன் 6
ஆயுதம் தாங்கிய இருவர் வீடு ஒன்றுக்குள் புகுந்து ரொக்கம் மற்றும் நகைகளை எடுத்துச் சென்றனர்.

நீர்வேலியில் இச்சம்பவம் நடந்தது. [இ-72]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புஸ்பா நெல்லி ரசம்**

விட்டமின் 'சி' சத்து நிரம்பியது
தாகசாந்தி பித்தம் ஒழிக்கும் இவற்றை நிவர்த்தி செய்து இரத்த சுத்தி செய்கிறது

1 போத்தல் விலை: ரூபா 25-

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல 5 (76) பெரியகடை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

6-6-1988 திங்கட்கிழமை



**நன்னாரி சர்பத்**

இது நரம்புத் தளர்ச்சி, களைப்பு, மூலவியாதி போன்ற உஷ்ண வியாதிகளைப் போக்கி தாகசாந்தி தருகிறது

1 போத்தல் விலை: ரூபா 25-

கிடைக்கும் இடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல 5 (76) பெரியகடை,
யாழ்ப்பாணம்.


# கல்விக் கதவடைப்பு

## அநாகரிகமான செயல்

### மறுபரிசிலனை செய்ய ராஜீவிடம் கோரிக்கை

சுன்னாகம், ஜூன் 6

இலங்கைத் தமிழ் மாணவர்கள் இந்தியாவில் கல்வி கற்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை (கதவடைப்பு) நியாயமற்றது மாத்திரமல்ல; அநாகரிகமானதுங்கூட. எனவே இந்நிலை குறித்து பாரதம் மறுபரிசிலனை செய்தல் அவசியமாகிறது.

சுன்னாகம் பிரஜைகள் குழு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு டிக்ஸித்துக்கும் அனுப்பிய அவசரக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'இலங்கையில் தமிழ் மக்கள் மீதும் குறிப்பாக தமிழ் மாணவர்கள் மீதும் இலங்கை அரசு பாரபட்சமாக நடந்தமையே, பல தமிழ் மாணவர்கள் பாரதம் சென்று தமது கல்வியைத் தொடர்ந்தமைக்கு உண்மையான காரணியாகும். இது பாரதமும் படித்த உண்மையாகும்' என பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு இ. சுப்பிரமணியம் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'கல்வியுலகமே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு நிலை இறங்கி, பாரதம், இலங்கைத்தமிழ் மாணவர்கள் இந்தியாவில் கல்வி கற்பதற்கு தடை விதித்துள்ளது. அநாகரீகமான இச்செயலை பாரதம் மறுபரிசிலனை செய்யவேண்டும்.

'இந்தியா உண்மையாகவே இலங்கைத் தமிழர் நலனில் அக்கறையுள்ள நாடு என்பதை செயலில் காட்ட உங்களுக்குக் கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துவீர்களாக' என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ 27)

# பஸ் நிலையத்தில் வெட்டுக் காயங்களுடன் நால்வரின் சடலங்கள்

வடமராட்சி, ஜூன் 6

வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தில் நான்கு பேர் வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தனர் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்ததாக அறிய வந்தது

குடும்பஸ்தர்களான பாலசுப்பிரமணியம் தங்கவேல், குமாரசாமி தேவக்கிளி, சபாரத்தினம் பழனிவேல், வேலும் மயிலும் சிதம்பரநடராசா (குட்டித்துரை) ஆகிய நான்கு வல்வை வாசிகளே கொலையுண்டவர்கள் ஆவர்.

நால்வரும் சனிக்கிழமை இரவு பஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்து இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள் எனச் சொல்லப்படுகிறது.

சம்பவதினம் இரவு ரோந்து புரிந்த அமைதிப்படையினர் சடலங்களைக் கண்டெடுத்துத் தமது வாகனத்தில் ஏற்றி வல்வை இந்திராணி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

கொலையுண்ட நால்வரின் சடலங்களும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் ஊடாக, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கொலைகளைச் செய்தவர்கள் யார் என்பது பற்றியோ, சரியான காரணமோ தெரியவில்லை. (அ-160)

## 1 ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. இளையதம்பி சிவராசா**
(அதிபர் நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15-07-1927 | 19-05-1987 |

திதி: 06-06-1988

அப்பா! நீங்கள்,
இல்லாத பிள்ளைகளாய் வாழ்வோம்
நாம் என்று எண்ணவில்லை
ஆயினும்
அதுதான் 'விதி' எமக்கு
என ஆக்கிவிட்டு
சென்று விட்டீர்கள்
நீங்கள் உள்ளவரை அஞ்சாத
நாம்
இப்போது அஞ்சி உயிர்மடிகிறோம்
விலைமதிப்பு ஏதுமில்லா சிகரமே
எங்கு நீர் சென்று மறைந்து விட்டீர்
உங்களது பிரிவினை சகிக்காத
அம்மாவையும் பறித்து விட்டீர்
பாரினில் எமக்கு யார் துணையோ
பகவான்தான் பதில் தருவான்
அன்னாரின் ஆத்மா சாந்திக்கு
பிரார்த்திப்போமாக!

103, செங்குந்த வீதி, கல்வியங்காடு.
இப்படிக்கு உங்களை இழந்து பரிதவிக்கும் அன்புமக்கள்
சி. சிவசக்தி
சி. சிவகௌரி
சி. சிவகுமாரன்

(43 2)

## புதிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் மருத்துவத்துறையுடன் தொடர்பு கொண்டு நாம் வேறொரு போதனா வைத்தியசாலையின் அவசியத்தை வலியுறுத்தி வருகிறோம்.

இது விடயமாக பல உலக ஸ்தாபனங்களிடமும், உதவி வழங்கும் நாடுகளிடமும் தொடர்பு கொண்டு வருகின்றோம்.

ஆனால் இந்த வைத்தியசாலையை எங்கு அமைப்பது என்பதில் கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. சிலர் இந்த புதிய போதனா வைத்தியசாலை தற்போதுள்ள போதனா வைத்தியசாலை உள்ள இடத்திலேயே நிறுவ வேண்டும் என்கின்றனர்.

சிலர் புதிய போதனா வைத்தியசாலை யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகே மருத்துவ பீடத்தை அண்டியதாக அமைக்கப்பட வேண்டும் என்கின்றனர்.

ஆனால் வேறு சிலரோ புதிய வைத்தியசாலை கிளிநொச்சிப் பகுதியில் நிறுவப்பட்டு பல்கலைக்கழக மருத்துவ பீடமும் அங்கு மாற்றப்படவேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இந்த கருத்து வேறுபாடுகளாலும், வேறு சில அரசியல் காரணங்களாலும் இந்த விடயத்தில் சிறு தடங்கல் நிலை நிலவுகிறது.

ஆனாலும் வெகுவிரைவில் மந்தநிலைகள் போக்கப்பட்டு புதிய வைத்தியசாலைக்கான உதவித் தொகைகளும் பெறப்பட்டுவிடும் என்று நான் நம்புகிறேன் - என்றார் டாக்டர் நச்சினார்க்கினியன். (அ-9)

## பதில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

பல்கலைக்கழகத்தையும் ஒரு பாடசாலை என்று சுறி, அமைதிப்படையினர் அங்கு சென்று பதில் அதிபர் என்று ஆங்கிலத்தில் விசாரித்தனராம்.

'வைஸ் பிறின்ஸிபல்' என விசாரிவ அமைதிப்படையினர் 'வைஸ் சான்சலரின்' உபவேந்தரின் பகுதிக்குச் சென்றனராம்.

அங்கு சென்ற படையினர் பதில் துணை வேந்தரையும் கூட்டத்திற்கு வர பணித்துச் சென்றனராம்.

பின்னர் பாடசாலைகளுக்கான கூட்டம் என்ற காரணத்தால் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் இந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை.

இதன் காரணமாகவே பதில் துணை வேந்தரை மூவாயிரம் அழைத்துச் சென்று அங்கௌ வரவான வார்த்தைகளால் ஏசியதாகக் கூறப்படுகிறது (அ-9)

## செய்தி ---

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கேட்கின்றேன்.

தமிழகமும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மட்டுமா கொன்று குவிக்கப்படுகிறார்கள்?

இந்திய இராணுவத்தின் இறக்கின்றார்கள். நம் வரிப் பணத்தில் இருக்கும் இந்திய இராணுவம் நம் தமிழர்களையே கொல்வது நியாயமா? இது அக்கிரமம் அல்லவா?

இவ்வாறு திரு. கருணாநிதி பேசினார். (இ-எ)

## பல்கலைக்கழக.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட அறிக்கை விபரம் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தரும் விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் கே. கனேசலிங்கத்தைக் கடந்த 3-ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ் பல்கலைக்கழகத்துக்கு வந்த அமைதிப் படையினர் வேலை செய்ய விடாது தடுத்தும், மிகவும் தரக்குறைவாக அணியும் வற்புறுத்தி முகாமுக்கு இந்திய அமைதிப் படை அழைத்துச் சென்று—

அங்கும் தரக்குறைவாக நடத்தியமையை பல்கலைக்கழக கல்விக் குழாம், மருத்துவ மாணவர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

இச்சம்பவத்தைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை தாது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து, காலை 9 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் கூடி, மேற்கொண்டு எடுக்கப் படவுள்ள நடவடிக்கை பற்றி குறித்து ஆராயப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-இ)

## இன்று சென்னையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கு வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதிப் போராட்டத்தின் மூலம் இந்திய அரசுக்கு தமிழ் மக்களின் மனநிலையை புரியவைக்க முடியும் என்றும்-

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சு வார்த்தை மூலம் தமிழரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசை வடக்கு, கிழக்கில் நிறுவ நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும் எனவும்-

விடுதிப் போராட்டக்குழு தெரிவித்துள்ளது. (அ-10-27)

## 120ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தையா முரளிதரன்**
வீரவேங்கை: பிரசாத்

| விண்ணிலிருந்து: | மண்ணிற்கு: |
|---|---|
| 1962-09-18 | 1988-02-06 |

மூன்றாக வித்தான மூளையில் பிறந்து யாழ்ப்பாணக் கல்லூரியின் சந்தாக வளர்ந்து நித்தம் சிறக்கவே பல கல்வியும் கற்று விளையாட்டில் முதல்வனும் விருதுகள் பெற்று பெற்றோரும் மற்றோரும் பெருமையுடனிருந்த தமிழ் ஈழம் காண வீர வேங்கையாய் மாறி மண்ணினைக் காத்துத் தமிழ் வீரம் சேர்த்து தியாகி திலீபனின் அரசியல்பொறுப்பினையுற்று பரணி பாடித் தானேத் தலைவனும் பேருடன் காலக் கொடுமையால் காலனின் நஞ்சாக உறைந்து

சுழத்தமிழர் இதயங்கள் கண்ணீரால் கரைய தியாகச் சுடராய்த் தீபமாய் என்றும் நின்றுய்

— பிரசாத் —

நண்பர்கள்:
வட்டுக்கோட்டைத்தொகுதி
(4108)

## மரண அறிவித்தல்கள்

**திரு. E. V. பொன்னுத்துரை**
(ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகர்)

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகரான திரு E. V. பொன்னுத்துரை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. S.J.V. செல்வநாயகம் அவர்களின் தம்பியாரும், நேசமலரின் அன்புக் கணவரும், மதி, திருமலர், சுகுணா, சுகுணராஜன், புனிதம், சந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வராஜா தம்பையா, அல்பேட் திருச்செல்வம், சாவகச்சேரி Dr. சார்ள்ஸ் கனகசுந்தரம், வசந்தி, ராஜ் சாமுவேல் ஆகியோரின் மாமனாரும், இரத்தினம், S.R. அலெக்சாந்தர், R. A. செல்வதுரை, C.A. நல்லரட்னம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதி ஊர்வலம் 6 ம் திகதி திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
பிள்ளைகள்

(4374)

**கணபதிப்பிள்ளை கோபாலசிங்கம்**

கணபதிப்பிள்ளை கோபாலசிங்கம் (கொழும்பு நில அளவைக் காரியாலயம்) 5.6.88இல் காலமாகிவிட்டார். அவர் சோபனா அவர்களின் அன்புக் கணவரும், குணவதி, கோபாலசிங்கம், சுபாஷினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், இளைப்பாறிய ஜேர்மன் பொன்சேகா அவர்களின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை 6.6.88 பிற்பகல் 4 மணிக்கு சமய கிரியைகளுக்கு பின்னர் தகனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

356, நாவலர் வீதி,
(ஸ்ரான்லி கல்லூரிக்கு அண்மையில்)

தகவல்
ராஜா புதுப்
4, புதுபடி ஒழுங்கை

(4375)


**உயர்கலைக்கல்லூரி**

யாழ்ப்பாணம்

கல்வித் திணைக்களத்தின் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெற்ற சிரேஷ்ட பாடசாலை

G. C. E (A/L) Arts ஆவணி 1989
G. C. E. (A/L) Commerce ஆவணி 1989
G. A. Q சித்திரை 1989
First - in - Commerce ஆவணி 1989
Shorthand and Typewriting (Ceylon and London Exam)
Home Science Diploma

அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இனி ஆனி 15 ஆம் திகதி சேர விரும்புவோர் முன் விண்ணப்பிக்கவும். மேலதிக விபரங்களுக்கு கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்

PRINCIPAL
The College of Higher Studies
73, Point Pedro Road,
Anaipanthy,
Jaffna
[4367]



**ஏலவிற்பனை**

சங்கத்தில் பழுதடைந்த துவிச்சக்கர வண்டிப் பொருட்களும், லொறிக்குப் பாவிக்கப்பட்ட பழைய உதிரிப்பாகங்களும் 11-06-88 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் சங்க முன்றலில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் பெற்றுக்கொள்ளும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்துவதுடன் அன்றைய தினமே பெற்றுக்கொண்டு அப்புறப்படுத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கம்
(சி 5371)



எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

1. ★ முரளி ★ நளினி ★ ராதாரவி "இரணுர் கிளி"
2. எதிர்பாராதது (சிவாஜி - பத்மினி)
3. ஆயிரம் ரூபாய் (ஜெமினி - சாவித்திரி)
4. பஞ்சபூதம் (M R ராதா - சுந்தோ)
5. போலிஸ்காரன் மகள் (முத்துராமன் - விஜயகுமாரி)
6. BLOOD SPORT (Karate)
7. NAM (War Film)

எமது இன்றைய வெளியீடு

சிவகுமார் - ராதிகா - மோகன்
'பாசப் பறவைகள்'

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23665
(C 5372)


வட இலங்கை
தனியார் மருத்துவக் கல்லூரி
மாணவர்களின்
பெற்றோர் / பாதுகாவலரின்

**விசேட பொதுக்கூட்டம்**

காலம்:
8-6-1988 புதன்கிழமை மு.ப. 11.00 மணி
இடம் நிர்வாகக் கட்டிடம் இலக்கம் 64, 4ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்

குறிப்பு: முக்கியமான தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருப்பதால் தவறாது சமூகமளிக்கவும்

இணைச்செயலாளர்
வ. இ. த. மருத்துவக் கல்லூரி,
பெற்றோர் / பாதுகாவலர் சங்கம்
(4369) 5-6-1988


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/8, Navalar Road, Jaffna on Monday, 6th June 1988



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org